**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# நமது பன்முகத்தன்மையின் இயல்புகளை விரிவாக்க வேண்டும்

## உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட்

**பெங்களூரு, நவ. 25:** நமது பன்முகத்தன்மையின் இயல்புகளை விரிவாக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தெரிவித்தார்.

ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் சட்ட முன்னேற்றங்களில் அக்கறை கொண்டுள்ள வழக்குரைஞர்கள், நீதிபதிகள், நடுவர்கள், சட்ட அமைப்புகளை உள்ளடக்கிய சட்ட ஆசியா அமைப்பின் 38-ஆவது மாநாட்டை இணையவழியில் தொடங்கிவைத்து, 'அடையாளம், தனிநபர் மற்றும் அரசு: சுதந்திரத்திற்கான புதிய பாதை' என்ற தலைப்பில் அவர் பேசியதாவது:

அவரவர் விருப்பத்தைத் தேர்வு செய்ய வாய்ப்பளிப்பதும், அதற்கேற்ப நமது வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொள்வதும் சுதந்திரம் ஆகும். அரசுக்கும், சுதந்திரத்திற்குமான உறவை அனைவரும் புரிந்து வைத்துள்ளனர் என்றாலும், அடையாளத்திற்கும் சுதந்திரத்திற்கும் உள்ள உறவை விளக்குவதும், உறுதிப்படுத்துவதும் முழுமையடையாமல் உள்ளது.

வழக்கத்தில், தனிமனிதரின் விருப்பத்தில் அரசின் தலையீடுகள் இல்லாமல் இருப்பதை சுதந்திரம் என்று புரிந்து வைத்திருக்கிறோம். எனினும், சமூக முன்முடிவுகள் மற்றும் படிநிலைகளைக் கட்டமைப்பதில் அரசுகளின் பங்களிப்பைப் புறந்தள்ள முடியாது என்கிறார்கள் நவீன சிந்தனையாளர்கள்.



நடைமுறையில், நேரடியாக தலையிடாவிட்டாலும், வரலாற்று ரீதியாக விளிம்பு நிலையில் வாழும் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு சமூக, பொருளாதார ஆளுமை படைத்தவர்களை அரசு தன்னியல்பாக அனுமதிக்கிறது. ஜாதி, இனம், மதம், பாலினம் அல்லது பாலியல் விருப்பங்களின் அடிப்படையில் விளிம்புநிலையை எதிர்கொள்ளும் மக்கள், வழக்கத்திலும், தாராளவாத சூழலிலும் ஒடுக்குமுறைக்கு ஆளாகிறார்கள். இது, சமூகரீதியாக ஆதிக்கம் நிறைந்தவர்களின் கரத்தை பலப்படுத்துகிறது.

1859-ஆம் ஆண்டு ஆங்கில தத்துவ அறிஞர் ஜான்ஸ்டுயர் மில் எழுதிய 'சுதந்திரம்' என்ற நூலில், அரசின் ஒடுக்குமுறையை விளக்கி, சுதந்திரத்திற்கும், அதிகாரத்திற்கும் இடையே நடக்கும் வரலாற்றுப் போராட்டங்களை விளக்கியிருக்கிறார். அரசின் ஒடுக்குமுறையை குடிமக்களின் சுதந்திரத்தின் மூலம் கட்டுப்படுத்த முடியும் என்கிறார்.

அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இரு வழிமுறைகளை முன்வைக்கிறார். ஒன்று, குடிமக்களுக்குத் தேவையான உரிமைகளை வழங்குவது; இரண்டாவது, அரசாட்சி முறைக்கு சமூக ஒப்புதல் தருவதை அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் கண்காணிக்க வேண்டும். உங்கள் கைகளை சுழற்றும் உரிமை என் மூக்கின் நுனியில் முடிகிறது என்பதுதான் சுதந்திரம்.

செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்பங்கள் பல புதுமையான அம்சங்களை வெளிப்படுத்துகின்றன. தனிநபருக்கும் செயற்கை நுண்ணறிவுக்கும் இடையே ஏராளமான சிக்கல்கள் தென்படுகின்றன. தனிநபரின் உரிமைகளில் செயற்கை நுண்ணறிவு தலையிடுவது அதிகரித்துள்ள நிலையில், அத் தொழில்நுட்பம் அறநெறிகளின்படி செயல்படுத்தப்படுகிறதா என்பது மிகப்பெரிய கேள்வியாக எழுந்துள்ளது.

இயந்திர மனிதனான சோஃபியாவுக்கு சவூதி அரேபியா குடியுரிமையை வழங்கியுள்ளது. வாழும் மனிதர்களின் அடையாளங்களின் அடிப்படையில் குடியுரிமை வழங்குவதை நாம் வெளிப்படுத்த வேண்டும். நமது கருத்தியல்புகளை விரிவாக்கிக் கொள்ள வேண்டும். பன்முகத்தன்மை மற்றும் பன்மைத்துவத்தை அதன் உண்மையான நோக்கத்தில் விரிவாக்க வேண்டியது அவசியமாகும். இந்தியாவில் சமூக நீதி நடைமுறையில் உள்ளது.

குறிப்பாக, இந்த உரிமையை தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோருக்கு அரசியலமைப்புச் சட்டம் வழங்குகிறது என்றார்.

# தேஜஸ் போர் விமானத்தில் பிரதமர்



தேஜஸ் போர் விமானத்தில் பயணம் மேற்கொண்ட பிரதமர் நரேந்திர மோடி.

**பெங்களூரு, நவ. 25:** பெங்களூரில் சனிக்கிழமை தேஜஸ் இலகுரக போர் விமானத்தில் பிரதமர் நரேந்திர மோடி பறந்தார்.

பெங்களூருக்கு சனிக்கிழமை வந்த பிரதமர் மோடி, ஹிந்துஸ்தான் விமானவியல் நிறுவனத்திற்குச் சென்று உற்பத்திப் பிரிவில் நடந்துவரும் பணிகளைப் பார்வையிட்டார். அதன்பிறகு, ஹிந்துஸ்தான் விமானவியல் நிறுவனம் தயாரித்துள்ள தேஜஸ் போர் விமானத்தில் பறந்தார்.

தேஜஸ் போர் விமானத்தின் பின் இருக்கையில் அமர்ந்திருந்த பிரதமர் மோடி, விமானி உடுத்தும் உடைகளை அணிந்திருந்தார். மேலும், விமானம் புறப்படுவதற்கு முன்பாக ஹிந்துஸ்தான் விமானவியல் நிறுவனத்தின் ஊழியர்கள், பாதுகாப்புத் துறை அதிகாரிகளை நோக்கி கையசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

சிறிது நேரம் விமானத்தில் பறந்த பிறகு பாதுகாப்பாகத் தரையிறங்கினார். பிரதமர் மோடி பறந்த விமானத்தின் அருகே மேலும் இரண்டு விமானங்களும் பாதுகாப்புக்காக பறந்து சென்றன.

தேஜஸ் இலகுரக போர் விமானப் பயணம் குறித்து, தனது எக்ஸ் பக்கத்தில் பிரதமர் மோடி வெளியிட்ட பதிவில், 'தேஜஸ் போர் விமானத்தில் வெற்றிகரமாகப் பறந்தேன். விமானத்தில் பறந்தது நம்பமுடியாத செழுமையான அனுபவத்தையும், நமது நாட்டின் உற்பத்தித் திறனில் நான் வைத்துள்ள நம்பிக்கையையும் உறுதிப்படுத்தியது. மேலும், நமது நாட்டின் திறன் குறித்த எனது பெருமிதம் மற்றும் நம்பிக்கையை புதுப்பிக்க உதவியது.

கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு போன்றவற்றால், தற்சார்புத் தளத்தில் உலகின் வேறு எந்த நாட்டுக்கும் நாம் குறைவானவர்கள் அல்ல என்பது தெளிவாகிறது.

இந்திய விமானப் படை, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு, ஹிந்துஸ்தான் விமானவியல் நிறுவனம் மட்டுமல்லாது, இந்தியர்கள் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ராணுவத் தளவாடங்களை இந்தியாவிலேயே உற்பத்தி செய்ய வேண்டும் என்பதை பிரதமர் மோடி தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளார். அண்மையில் பிரதமர் மோடி அமெரிக்கா சென்றிருந்தபோது, எம்.கே.2 தேஜஸ் விமானத்தின் என்ஜின் உற்பத்தியைக் கூட்டு முயற்சியில் தயாரிக்க அமெரிக்காவின் ஜி.இ. விமானவியல் நிறுவனத்துடன் ஹிந்துஸ்தான் விமானவியல் நிறுவனம் ஒப்பந்தம் செய்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் பல நாடுகளும் தேஜஸ் போர் விமானத்தை கொள்முதல் செய்ய ஆர்வம் காட்டியுள்ளன என்று பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 22 மொழிகளிலும் குடிமைப் பணித் தேர்வு: உயர்நீதிமன்றத்தில் மனு

**சென்னை, நவ. 25:** ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்ற குடிமைப்பணித் தேர்வுகளை 22 மாநில மொழிகளிலும் நடத்த உத்தரவிடக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் பொது நல மனு தாக்கல் செய்யப்பட்டது.

போட்டித் தேர்வுகளில் பங்கேற்போருக்கு பயிற்சி அளிக்கும் மதுரையைச் சேர்ந்த எஸ்.பாலமுருகன் என்பவர் தாக்கல் செய்த மனுவில், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் ஐஏஎஸ் ஐபிஎஸ் போன்ற குடிமைப் பணித் தேர்வுகளுக்கான வினாத்தாள்கள் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் கேள்விகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இது ஹிந்தி மொழி தெரிந்தவர்களுக்கு சாதகமாக இருப்பதாகவும், மாநில மொழிகளில் புலமைப் பெற்றவர்களுக்கு பாரபட்சமாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தத் தேர்வுகளை ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் மட்டுமே நடத்துவதால் வேலைவாய்ப்பில் சம வாய்ப்பு மறுக்கப்படுவதாகக் கூறியுள்ள மனுதாரர், அரசியல் சாசனத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள 22 மாநில மொழிகளிலும் இந்த தேர்வுகளை நடத்த உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த மனு மீதான விசாரணையை தலைமை நீதிபதி கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி அடங்கிய அமர்வு, டிசம்பர் 6-ஆம் தேதிக்கு ஒத்தி வைத்துள்ளது.

EVA STALIN IAS ACADEMY

# விண்ணில் 'எல்-1' பகுதியை நெருங்கிய ஆதித்யா விண்கலம்

## இஸ்ரோ தலைவர் சோமநாத்

**திருவனந்தபுரம், நவ.25:** 'சூரியனை ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் சார்பில் அனுப்பப்பட்ட ஆதித்யா எல்-1 விண்கலம் விண்ணில் தான் சென்றடைய வேண்டிய 'எல்-1' பகுதியை நெருங்கியிருப்பதாக' இஸ்ரோ தலைவர் எஸ்.சோமநாத் தெரிவித்தார்.

'விண்கலம் 'எல்-1' பகுதிக்குள் நுழைவது வரும் 2024 ஜனவரி 7-ஆம் தேதி நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது' என்றும் அவர் தெரிவித்தார்.

சந்திரயான்-3 விண்கலம் நிலவில் வெற்றிகரமாகத் தரையிறங்கி தனது ஆய்வையும் நிகழ்த்தி முடித்த நிலையில், சூரியனின் புறவெளியை ஆய்வு செய்ய ஆதித்யா எல்-1 விண்கலத்தை இஸ்ரோ கடந்த செப்டம்பர் 2-ஆம் தேதி விண்ணில் வெற்றிகரமாக செலுத்தியது.

தொடக்கத்தில் பூமியை நீள்வட்டப் பாதையில் சுற்றிவந்த விண்கலத்தின் உயரம் படிப்படியாக 5 முறை உயர்த்தப்பட்டது. கடைசியாக கடந்த செப்டம்பர் 15-ஆம் தேதி அதன் பயணப் பாதை மாற்றியமைக்கப்பட்ட பின்னர், புவி வட்டப் பாதையிலிருந்து விலகி, சூரியனை நோக்கிய பயணத்தை விண்கலம் மேற்கொண்டது. தற்போது, தனது இறுதிப் பகுதியை விண்கலம் நெருங்கியுள்ளது.



இந்தியாவில் உருவாக்கப்பட்ட முதல் ஒலி எழுப்பும் ராக்கெட் ஏவப்பட்டதன் 60-ஆம் ஆண்டு நினைவு விழா திருவனந்தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி ஆய்வு மையத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்ற இஸ்ரோ தலைவர் சோமநாத்திடம், ஆதித்யா விண்கலத்தின் பயணம் குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்து சோமநாத் கூறியதாவது:

'ஆதித்யா விண்கலம் தனது இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கிறது. விண்கலம் சென்றடைய வேண்டிய 'எல்-1' இறுதி பகுதிக்குள் நுழைவதற்கான இறுதிக்கட்ட உந்துதல் நடவடிக்கை வரும் 2024, ஜனவரி 7-ஆம் தேதி மேற்கொள்ளப்பட வாய்ப்புள்ளது' என்றார்.

**'எல்-1' பகுதி:** பூமியிலிருந்து சுமார் 15 லட்சம் கி.மீ. தொலைவில் உள்ள 'லாக்ராஞ்சியன் பாயின்ட் ஒன்' (எல்-1) என்றபூமிக்கும் சூரியனுக்கும் இடையேயான பகுதியில் ஈர்ப்பு விசை சமமாக இருக்கும். சுமார் 1,475 கிலோ எடை கொண்ட ஆதித்யா விண்கலம் 125 நாள்கள் பயணத்துக்கு பின்னர், இந்த எல்-1 பகுதியில் நிலைநிறுத்தப்படும். அங்கிருந்தபடி சூரிய புறவெளியின் வெப்பச் சூழல், கதிர்வீச்சு, காந்தப் புயல் உள்ளிட்டவை குறித்த ஆய்வுகளை விண்கலம் மேற்கொள்ளும்.

இதற்காக சோலார் அல்ட்ரா வைலட் இமேஜிங் டெலஸ்கோப் (தொலைநோக்கி), பிளாஸ்மா அனலைசர் (பகுப்பாய்வு கருவி), எக்ஸ்ரே ஸ்பெக்ட்ரோ மீட்டர் (ஊடுகதிர் நிறமாலைமானி) உள்ளிட்ட 7 விதமான ஆய்வுக் கருவிகள் ஆதித்யா விண்கலத்தில் இடம்பெற்றுள்ளன.

# சுரங்க விபத்து: மலையில் செங்குத்தாக துளையிட முடிவு

**உத்தரகாசி, நவ. 25:** உத்தரகண்டில் நிலச்சரிவால் 13 நாள்களாக சுரங்கப் பாதைக்குள் சிக்கியுள்ள 41 தொழிலாளர்களை மீட்கும் பணியின்போது துளையிடும் 'ஆக்கர்' இயந்திரம் சனிக்கிழமை உடைந்ததால், மீட்புப் பணியில் மீண்டும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

அதன் காரணமாக, மலைப் பகுதியில் செங்குத்தாக துளையிடுவதற்கான மாற்று முயற்சியை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

உத்தரகண்டின் உத்தரகாசி மாவட்டத்தின் சில்க்யாரா பகுதியில் கட்டப்பட்டு வந்த சுரங்கப் பாதை கடந்த 12-ஆம் தேதி ஏற்பட்ட திடீர் நிலச்சரிவு காரணமாக இடிந்தது. இதனால் சுரங்கப் பாதைக்குள் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த 41 தொழிலாளர்கள், கடுமையான இடிபாடுகளுக்குப் பின்னால் சிக்கிக் கொண்டனர்.

தொழிலாளர்கள் மயங்கிவிடாமல் இருக்க ஆக்சிஜன் செலுத்தப்பட்டு வருகிறது. அதிக அளவிலான உணவுகளையும், கைப்பேசி, அதற்கான மின்னேற்றிகளையும் அனுப்ப இடிபாடுகள் வழியாக 6 அங்குலம் அகலமுள்ள குழாய் செலுத்தப்பட்டது. இந்தக் குழாய் வழியாக அனுப்பப்பட்ட என்டோஸ்கோபி கேமரா மூலம் அனைத்து தொழிலாளர்களும் நலமாக இருப்பது உறுதி செய்யப்பட்டது.

### துளையிடும் கருவி உடைந்ததால் மாற்று முயற்சி



உத்தரகாசி சுரங்கப் பகுதிக்கு சனிக்கிழமை கொண்டுவரப்பட்ட செங்குத்தாக துளையிடும் இயந்திரம்.

இதனிடையே, 60 மீட்டர் தொலைவுக்கு 80 செ.மீ. விட்டம் கொண்ட குழாயைச் செலுத்தி தொழிலாளர்களை மீட்பதற்கான பணிகள் தொடங்கி நடைபெற்று வந்தன. குழாயைச் செலுத்துவதற்கு துளையிடப்பட்ட பாதையில் இரும்புக் கம்பிகள் குறுக்கிட்டதால் மீட்புப்பணி கடந்தபுதன்கிழமை இரவு நிறுத்தப்பட்டது. அந்தக் கம்பிகள் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து, துளையிடும் பணிகள் வியாழக்கிழமை மதியம் மீண்டும் தொடங்கப்பட்டன.

பணிகள் தொடங்கிய சில மணி நேரங்களில் துளையிடும் 25 டன் எடைக் கொண்ட 'ஆக்கர்' இயந்திரம் நிறுவப்பட்டுள்ள கான்கிரீட் தளத்தில் விரிசல் ஏற்பட்டதால், மீட்புப்பணிகள் தொடர்வதில் சிக்கல் நிலவியது.

கான்கிரீட் தளத்தில் உண்டான விரிசல் சீர் செய்யப்பட்டு பணிகள் வெள்ளிக்கிழமை மாலை மீண்டும் தொடங்கப்பட்டது. துளையிட்ட பாதையில் குழாய் 46.8 மீட்டர் அளவுக்கு செலுத்தப்பட்ட நிலையில்,பாதையில்உலோகப்பொருள் குறுக்கிட்டதால் பணிகள் மீண்டும் நிறுத்தப்பட்டன.

**கருவி சேதம்:** சனிக்கிழமை காலை துளையிடும் பணி மீண்டும் தொடங்கப்பட்டபோது, 'ஆக்கர்' இயந்திரத்தின் கூர்முனைப் பகுதி உடைந்தது. அதனால், மீட்புப் பணியில் மீண்டும் பின்னடைவு ஏற்பட்டது.

இதுகுறித்து சர்வதேச சுரங்க நிபுணர் அர்னால்ட் டிக்ஸ் சனிக்கிழமை கூறுகையில், 'துளையிடும் பணியில் பயன்படுத்தப்பட்டு வந்த 'ஆக்கர்' இயந்திரம் தொடர் தடைகளை எதிர்கொண்டு வந்த நிலையில், சனிக்கிழமை அதன் முனையும் உடைந்துவிட்டது. இனி துளையிடும் பணியில் அந்த இயந்திரத்தைப் பயன்படுத்த முடியாது.

இதைத் தவிர, மலைப் பகுதியில் செங்குத்தாக துளையிடுவது அல்லது கைகளால் இயந்திரங்களைப் பயன்படுத்தி துளையிடுவது என அனைத்து வாய்ப்புகள் குறித்தும் ஆராயப்பட்டுவிட்டது. இந்த ஒவ்வொருவாய்ப்பைப்பயன்படுத்தும் போது, சாதக மற்றும் பாதகங்கள் எழுகின்றன. மலையைத் துளையிடுவது சவாலாக உள்ளது. இதில் அவசரப்படுவது, மேலும் பாதிப்புகளை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. இருந்தபோதும், தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது' என்றார்.

**செங்குத்தாக துளையிட திட்டம்:** 'ஆக்கர்' இயந்திரம் உடைந்ததைத்தொடர்ந்து,மலைப் பகுதியில் செங்குத்தாக துளையிடுவதற்கான யோசனையை நடைமுறைப்படுத்த அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இதுகுறித்து அதிகாரி ஒருவர் கூறுகையில்,'இயந்திரத்தின் மூலம் துளையிடும் பணியில் தொடர் தடை ஏற்பட்டதைத் தொடர்ந்து, எஞ்சிய 10 முதல் 12 மீட்டர் தொலைவை கைகளால் துளையிடுவது என ஆலோசிக்கப்பட்டது.

ஆனால், அதற்கு நீண்ட நேரம் ஆகும் என்பதால், மலைப் பகுதியில் செங்குத்தாக துளையிடும் யோசனையை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன' என்றார்.

### நீண்ட கால தாமதம் ஆகலாம்: என்டிஎம்ஏ

'சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணியில் நீண்ட கால தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது' என்று தேசிய பேரிடர் மேலாண்மை (என்டிஎம்ஏ) அதிகாரிகள் சனிக்கிழமை தெரிவித்தனர்.

சில்க்யாரா பகுதியில் மீட்புப் பணிகளைப் பார்வையிட்ட என்டிஎம்ஏ உறுப்பினர் லெப்டினன்ட் ஜெனரல் (ஓய்வு) சையது அடா ஹஸ்னைன் கூறுகையில், 'மீட்புப் பணிகள் மிகுந்த கவனமுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதால், சுரங்கத்தினுள் சிக்கியுள்ள தொழிலாளர்களை பாதுகாப்பாக வெளியே கொண்டுவருவதற்கு கால தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

தற்போது மலைப் பகுதியில் செங்குத்தாக துளையிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த 24 முதல் 36 மணி நேரத்தில் செங்குத்தாக துளையிடும் பணி தொடங்கப்பட்டுவிடும். தொழிலாளர்கள் சிக்கியுள்ள சுரங்கத்தின் மேல் ஓடு பகுதியை சென்றடைய 86 மீட்டர் அளவுக்கு செங்குத்தாக துளையிட வேண்டியுள்ளது. அதன் பிறகு, சுரங்க ஓடு பகுதி உடைக்கப்பட்டு, தொழிலாளர்கள் மீட்கப்படுவர். இது மிகவும் கடினமான பணி.

இதுவரை 2 துளையிடும் முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மூன்றாவதாக 'ட்ரிஃப்ட்' நடைமுறையும் விரைவில் பயன்படுத்தப்படும்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வந்த கிடைமட்டமாக துளையிடும் பணியில் 47 மீட்டர் தொலைவுக்கு துளையிடப்பட்டது. ஆனால், துளையிட பயன்படுத்தப்பட்ட 'ஆக்கர்' இயந்திரம் உடைந்துவிட்டது. இயந்திரத்தின் உடைந்த பகுதி அப்புறப்படுத்தப்பட்டு, துளையிட்ட பகுதி அப்படியே வைக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்த நிலையில், மலைப் பகுதியில் செங்குத்தாக துளையிடுவதற்காக சுரங்கப் பகுதியிலிருந்து குறைந்தஉயரம்கொண்ட இரண்டு பகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அந்தப் பகுதிக்கு மிகப் பெரிய துளையிடும் இயந்திரங்கள் சனிக்கிழமைகாலைகொண்டு செல்லப்பட்டன.

எல்லை சாலைகள் அமைப்பு (பி.ஆர்.ஓ)சார்பில்சுரங்கத்தின்மேல் பகுதியில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 1.5 கி.மீ. நீள சாலையும், இந்த செங்குத்து துளையிடுவதற்கான ஓரிடமாக அதிகாரிகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.